செ.வெ.எண்: 11 நாள்: 06.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் முழுகணினி மயமாக்குதல் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக அவசர நடவடிக்கைகள் எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் குடும்ப அட்டைளுக்கும் பிப்ரவரி 28ம் தேதிக்குள்ளாக குறைந்தபட்சம் ஒரு நபருக்காவது ஆதார் பதிவு செய்திருக்க வேண்டும். மார்ச் 15, 2017 க்குள் அனைத்து அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் அலைபேசியினை விற்பனை முனைய இயந்திரத்தில் பதிவு செய்திடல் வேண்டும். மேற்படி முழு கணினி மயமாக்கல் குறித்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்கண்டவாறு ஆதார் பதிவு முழுமையடையாமல் நிலுவையில் உள்ளது.

| வ. எண். | தாலுகா பெயர் | மொத்த குடும்ப அட்டைகள் | மொத்த குடும்ப உறுப்பினர்கள் | ஆதார் பதிவு செய்த உறுப்பினர்கள் | ஆதார்பதிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் | "0" ஆதார் பதிவு செய்யப்படாத குடும்ப அட்டைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆலங்குடி | 43249 | 174039 | 139986 | 34053 | 130 |
| 2 | அறந்தாங்கி | 54078 | 198221 | 159692 | 38529 | 149 |
| 3 | ஆவுடையார்கோயில் | 22909 | 83534 | 69695 | 13839 | 187 |
| 4 | கந்தர்வகோட்டை | 22459 | 89687 | 73387 | 16300 | 9 |
| 5 | இலுப்பூர் | 32822 | 125895 | 107730 | 18165 | 249 |
| 6 | கறம்பக்குடி | 26824 | 115993 | 92066 | 23927 | 0 |
| 7 | குளத்தூர் | 38385 | 139291 | 118037 | 21254 | 299 |
| 8 | மணமேல்குடி | 25065 | 96484 | 71727 | 24757 | 38 |
| 9 | புதுக்கோட்டை | 28524 | 97227 | 92142 | 5085 | 7 |
| 10 | பொன்னமராவதி | 61865 | 231745 | 184268 | 47477 | 1319 |
| 11 | திருமயம் | 41504 | 159399 | 133964 | 25435 | 178 |
| 12 | விராலிமலை | 24989 | 99620 | 88319 | 11301 | 41 |
| | மொத்தம் | 422673 | 1611135 | 1331013 | 280122 | 2606 |

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களும் தங்கள் குடும்ப அட்டையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் ஆதார் பதிவினை தங்களது வட்ட வழங்கல் அலுவலகம் அல்லது தங்கள் அங்காடியில் பதிவு செய்து கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஏப்ரல் 1ம் தேதி முதல் ஆதார் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே மின்னனு குடும்ப அட்டை வழங்கப்பட உள்ளது. மேலும், ஆதார் பதிவு செய்யாத குடும்ப அட்டைகளுக்கு மின்னனு குடும்ப அட்டை வழங்க இயலாது. எனவே, ஆதார் பதிவு செய்யாத குடும்ப அட்டைதாரர்கள் உடனடியாக ஆதார் பதிவு செய்து, மின்னனு குடும்ப அட்டை பெற்று கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**